ஈரோடு மாவட்டம் – சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சி
செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் :– திரு.கே.மகேந்திரன்

ந.க.எண்.42/2024 நாள்.14.03.2024

பொருள்: வீட்டுமனைப்பிரிவு அங்கீகாரம் – ஈரோடு மாவட்டம் – சிவகிரி பேரூராட்சி – வார்டு எண்.3 அம்மன்நகர் – சிவகிரி அ கிராமம், ரீ.ச.எண்.165/2எ1எ – இல் 0.92 ஏக்கர் 3725.00 ச.மீ. பரப்பளவில் 14 எண்ணிக்கையில் வீட்டுமனைகள் ஏற்படுத்தியது – மோகனசுந்தர் மற்றும் ரங்கசாமி என்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் அளித்து உத்திரவிடப்படுகிறது.

பார்வை : 1)ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.ERD/KGZ39RW6/ 2023/TCP நாள்.25.07.2023.
2)சார்பதிவாளர் அலுவலகம் சிவகிரி தானசெட்டில்மென்ட் ஆவணம் எண்.1797/2023 நாள்.11.07.2023.
3)சிவகிரி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.46/2024 நாள்.12.03.2024.
4)சிவகிரி பேரூராட்சி (தொகுப்பு) இளநிலை பொறியாளர் அவர்களால் தல ஆய்வு செய்யப்பட்டமைக்கான சான்று நாள்.14.03.2024.
5)தொடர்புடைய ஆவணங்கள்.

***********

உத்திரவு:-

ஈரோடு மாவட்டம், சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சி, வார்டு எண்.3 அம்மன் நகர், சிவகிரி அ கிராமம், ரீ.ச.எண்.165/2எ1எ – இல் 0.92 ஏக்கர் 3725.00 ச.மீ. பரப்பளவில் அதன் உரிமையாளர்கள் திரு.மோகனசுந்தர் மற்றும் திரு.ரங்கசாமி என்பவர்களால் மேற்கண்ட பூமியில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்துவதற்கு, ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் ந.க.எண்.ERD/KGZ39RW6/ 2023/TCP நாள்.25.07.2023 – இன் படி உத்தேச மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் வழங்கி உள்ள மனைப்பிரிவின் சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடத்தில் உள்ளபடி சாலை மூலைமுடக்கு உட்பட பொது உபயோகம் உள்ள இடத்தினை தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கான ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட்ட சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. வடிகால் மற்றும் சோலார் தெருவிளக்குகள் அமைத்ததுடன் பசுமை மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளது. இவ்வலுவலக இளநிலை பொறியாளர் அவர்களால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டமைக்கு சான்று வழங்கப்பட்டுள்ளது.

விதிகளின்படி 10% பூங்கா 247.79 ச.மீ. பரப்பளவிற்கு ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை ரூ.2,42,844/– ஐ அரசு துறை தலைப்பில் நாள்.12.07.2023 – இன்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

அரசு கணக்கு தலைப்பில் மொத்த மனைப்பரப்பு 3725.00 ச.மீ. அளவிற்கு 3 சதவீத சந்தை மதிப்பு ரூ.72,638/– சலான் எண்.20240314033048 நாள்.14.03.2024 – இன்படி செலுத்தப்பட்டுள்ளது.

சிவகிரி பேரூராட்சிக்கு மனைப்பிரிவிற்கான கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் ரூ.46,588/– சலான் எண்.790/2023–2024 நாள்.14.03.2024 – இன்படி செலுத்தப்பட்டுள்ளது மற்றும் பாதுகாப்பு வைப்பு தொகையாக 1 ச.மீட்டருக்கு ரூ.50/– வீதம் 3725.00 ச.மீட்டருக்கு ரூ.186250/– சலான் எண்.791/2023–2024 நாள்.14.03.2024 – இன்படி செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | பரப்பளவு |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 0.92 ஏக்கர் (அல்லது) 3725 ச.மீ. |
| 2 | ஒதுக்கிய மனைகள் | 14 |
| 3 | மனைப்பிரிவு சாலைகள் பரப்பு | 1247.07 ச.மீ. |
| 4 | உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு | 48.77 ச.மீ. |
| 5 | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை மின்பகிர்மானப் பரப்பு (TANGEDCO) | 77.76 ச.மீ. |

சிவகிரி பேரூராட்சி வார்டு எண்.3 அம்மன்நகர், சிவகிரி அ கிராமம், ரீ.ச.எண்.165/2எ1எ – இல் ஏற்படுத்தப்பட்டுள்ள பூங்கா, பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்கள் நீங்கலாக உள்ள 14 மனைப்பிரிவிற்கு பார்வை 1 இல் காணும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அங்கீகாரத்தின்படியும், பார்வை 3 இல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படியும், பார்வை 4 இல் காணும் சிவகிரி பேரூராட்சி (தொகுப்பு) இளநிலை பொறியாளர் அவர்களால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றமைக்கான சான்று வழங்கப்பட்டதன் அடிப்படையில் மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் அளித்து உத்திரவிடப்படுகிறது.

14/3/2024

செயல் அலுவலர்,
சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

14.3.2024

<u>பெறுநர்</u>:-

திரு.மோகனசுந்தர் மற்றும் திரு.ரங்கசாமி,
20, ஜீவா தெரு,
சிவகிரி.

<u>நகல்:-</u>

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சிவகிரி சார்பதிவாளர் அலுவலகம், சிவகிரி, ஈரோடு – 638109.
4. உதவி இயக்குநர் (நிலஅளவை), ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.
5. தனி வட்டாட்சியர், நகர நில அளவை, கொடுமுடி வட்டம், ஈரோடு மாவட்டம்.

Scanned with OKEN Scanner